திரு கே. எ. வகாப் : தலைவரவர்களே, அமைக்கப்படவிருக்கிற டெலிவிஷன் நிலையம் எத்தனை மாடிக்கட்டிடத்தில் இருக்கும்? அந்த நிலையத்திற்குப் போக மீதியுள்ள மாடிகளில்—அயல் நாடுகளில் அரசாங்க அலுவலகங்களை வைத்திருக்கிறார்கள்—அரசாங்க அலுவலகங்களைவைக்க அரசு உத்தேசிக்குமா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : நம்முடைய அரசைப் பொறுத்தவரையில் நாம் 5 ஏக்கர் நிலம் கொடுத்து இருக்கிறோம். மத்திய அரசாங்கத்தின் திட்டத்தின் மூலமாக இது கட்டப்படுகிறது. முழு பொறுப்பும் மத்திய அரசாங்கத்தைச் சார்ந்தது.

திரு ஆ. பரந்தாமன் : வெளிநாடுகளிலே கிரிக்கெட் போன்ற விளையாட்டுக்களை எல்லாம் டெலிவிஷனில் பார்க்கிறார்கள். அப்படிப்பட்ட வசதிகள் சென்னையிலும் செய்து தரப்படுமா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : அப்படிப்பட்ட வசதிகள் வரும் என்றுதான் நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

திரு ரா. ரா. முனுசாமி : டில்லியில் டெலிவிஷன் காட்சியை தமிழ் நாடு ஹவுசிலும், மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களும் பார்க்கக்கூடிய அளவுக்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது. அதேபோல் சென்னை சட்டமன்ற விடுதியில் சட்டமன்ற உறுப்பினர்கள் பார்க்கக்கூடிய அளவுக்கு வசதி செய்து தரப்படுமா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல் டில்லியில் தமிழ்நாடு ஹவுசில் ஏற்பாடு இருக்கிறது. நாம் ஏற்கனவே நல்ல யோசனை என்று சொன்னேன். பேரவை முன்னவருடைய முயற்சியில் நிறைவேற்றப்பட வேண்டும்,

கும்முடிப்பூண்டியில் எடுக்கப்பட்டுள்ள திட்ட வேலைகள்.

"471—வினா—திரு கா. வேழவேந்தன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) 1972-ஆம் ஆண்டு ப்ப்ரவரித் திங்கள் 29-ஆம் நாள் அன்று பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கும்முடிப்பூண்டித் தொகுதியில் நேரில் பார்வையிட்ட திட்டங்கள் என்னென்ன ?

(ஆ) இவற்றில் எந்தெந்த திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன?

மாண்புமிகு திரு எஸ். ஜே சாதிக் பாட்சா :—(அ) மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வேலைகளை 29—2—72-ல் பாாவையிட்டார்கள் :—

I. பொன்னேரி தாலுக்கா :

1. அன்னப்ப நாயக்கன் அணைக்கட்டிலிருந்து கும்முடிப்பூண்டி இசா ஏரிக்கு நீர் வழங்கும் திட்டம். ....

2. கீழ் கோடி குளத்திற்கு தண்ணீர் கொடுக்கும் திட்டம்.

II. திருவள்ளூர் தாலுக்கா—

(1) சோழவரம் வரவு கால்வாயின் குறுக்கே மாகரல் கண்டிகை எனும் கிராமத்தில் பாலம் கட்ட உத்தேசித்திருக்கும் இடம்.

(2) பிச்சாத்தூர் தாராச்சி கிராமத்திலிருக்கும் வரவு கால்வாயின் குறுக்கே பாலம் கட்ட உத்தேசித்திருக்கும் இடம்.

(3) பெரிய பாளையம் கிராமத்தில் ஆரணி ஆற்றின் குறுக்கே அணைக் கட்டு அமைக்க உத்தேசித்திருக்கும் இடம்.

III. சாலைகள்—

(1) குசஸ்தலியார் மைல் 11/4-6 அருகே வெங்கல் பாகல் மேடு அணைக்கட்டு திட்டம்.

(2) பெரியபாளையம் அருகே ஆரணியாற்றிற்கு குறுக்கே பாலம் கட்டும் திட்டம்.

(3) ஈகுவார்ப்பாளையம் பாலம் கட்டும் திட்டம்.

(4) காரணி அருகே பாலம் அமைக்கும் திட்டம்.

(இ) ஈக்வார்பாளையம் பாலம் கட்டும் திட்டம் தவிர மற்ற திட்டங்களின் மேல் அரசு ஆணை வழங்கப்படவில்லை.

(பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

திரு. கா. வேழவேந்தன் : 29-2-72 அன்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வெயிலில் இந்தப் பகுதிகளை எல்லாம் பார்த்ததற்காக நன்றி யறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஈகுவார் பாளையம் திட்டத்திற்கு 9 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பெரிய பாளையம் மேம்பாலம் திட்டம் போன்ற திட்டங்களை படிப்படியாக நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தங்களுடைய தொகுதியில் இருக்கும் எல்லாத் திட்டங்களுக்கும் புள்ளி விவரத்தைக் கேட்டிருக்கிறார்கள். ஈகுவார் பாளையம் திட்டத்திற்கு அரசு அனுமதி அளித்திருக்கிறது. மற்றத் திட்டங்கள் பல்வேறு கட்டங் களில் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. பரிசீலிக்கப்பட்ட பிறகு படிப் படியாக நிறைவேற்ற திட்டங்கள் வகுக்கப்படும்.

மதுராந்தகத்தினருகே புறவழிச்சாலை

* 472 வினா. திரு. சி. ஆறுமுகம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—